# விமானப்படைத் தளபதியின் அதிகாரம் குறைப்பு; உப-தளபதியே தாக்குதல் பற்றி முடிவெடுப்பார்


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 02 இதழ் 280
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 17 — 11 — 1992


(கொழும்பு)
இலங்கை விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தனவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, பல அதிகாரங்கள் விமானப்படை உப தளபதி ஒலிவர் ரணசிங்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(2-ம் பக்கம் பார்க்க)

## 'வை'ரக விமானங்களை சீனாவுக்கு அனுப்ப முயற்சி

(கொழும்பு)
விமானப் படையினரிடம் தற்போது இயங்கமுடியாத நிலையில் உள்ள 'வை-8', 'வை-12' ரக விமானங்களை சீனாவுக்கு அனுப்ப கூட்டுப் படைத் தலைமையகம் முடிவு

(2-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவின் முடிவு டிசம்பரில் வெளியாகும்

(கொழும்பு)
மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையை அடுத்த மாதம் 15ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இதற்கான முன்னேற்பாடுகளில் நாடாளுமன்றத் தெரி

(2ம் பக்கம் பார்க்க)

★ மோட்டார் சைக்கிளில் வெடிகுண்டுடன் வந்த இளைஞரின்

# தற்கொலைப்படை தாக்குதலுக்கு கடற்படை தளபதி கிளான்ஸி பலி

## மற்றும் மூவர் உயிரிழப்பு; கொழும்பில் பதற்றம்

(கொழும்பு)
கொழும்பு காலி வீதியில் தாஜ் சமுத்திரா ஹோட்டலின் முன்னால், நேற்றுக் காலை 8-35 மணியளவில் கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்ணாண்டோவின் காரின் மீது மோட்டார் சைக்கிளில் வெடிகுண்டுடன் வந்த தற்கொலைப் படை வீரர் ஒருவர் மோதித் தாக்கியதில், தளபதி கிளான்ஸி பெர்ணாண்டோ (53 வயது) ஸ்தலத்திலேயே பலியானார். இவருடன் காரில் சென்ற மெய்ப்பாதுகாவலரும், கார்ச் சாரதியும், கடற்படை அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டனர். கடற்படைத் தளபதியின் அந்தரங்க உதவியாளர் தூக்கியெறியப்பட்டு பலத்த காயங்களுடன் கவலைக்கிடமான நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை தனது வீட்டிலிருந்து கடற்படைத் தலைமையகம் நோக்கி பாதுகாப்பு அதிகாரிகளுடன் கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்ணாண்டோ காரில் புறப்பட்டார். இவரது காருக்குப் பாதுகாப்பாக முன்னால் இரண்டு மோட்டார் சைக்கிள்களும், பின்னால் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் காரின் அருகருகே செல்ல பின்னால் ஜீப் வண்டிகளில் அதிகாரிகள் பலரும் பின்தொடர்ந்தனர்.

### காருடன் மோட்டார் சைக்கிள் மோதியது

சனநெருக்கடி நிறைந்த காலி மத்திய வீதியில் இவரது கார் குறைந்த வேகத்தில் சென்று கொண்டிருக்கும் போது இவரது காரைப் பின்தொடர்ந்து வந்து பின் பக்கவாட்டில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் திடீரென இவரது கார் மீது மோட்டார் சைக்கிளை மோதினார்.

### தடையையும் மீறி தாக்குதல்

மோட்டார் சைக்கிள் இளைஞர் திடீரென காரின் பக்கவாட்டை நோக்கி மிகவேகத்துடன் மோட்டார் சைக்கிளை செலுத்தியபோது அபாயத்தை உணர்ந்த கிளான்ஸி பெர்ணாண்டோவின் காருக்குப் பாதுகாப்பாக வந்த மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு வீரர்கள் இவரைத் தடுக்க முற்பட்டனர். எனினும் இதனையும் மீறி மோட்டார் சைக்கிள், காரின் பக்கவாட்டில் பின்புறக் கதவுடன் வேகமாக மோதியது.

### கார் வெடித்துச் சிதறியது

மோட்டார் சைக்கிள் மோதியதும் பெரும் சத்தத்துடன் கார் வெடித்துச் சிதறி சுமார் 15 அடி உயரத்திற்கு எழுந்து சுக்கு நூறாகி தலைகீழாக கவிழ்ந்து வீழ்ந்தது. இதே நேரம் அந்த மோட்டார் சைக்கிளும் சுக்குநூறாகச் சிதறியது.

கார் மேலே தூக்கி வீசப்பட்டபோது காரினுள் இருந்த கடற்படைத் தளபதியின் அந்தரங்க உதவியாளர் காருக்கு வெளியில் பல யார் தூரத்திற்கு அப்பால் தூக்கி எறியப்பட்டு மின் கம்பம் ஒன்றுடன் மோதி வீழ்ந்தார்.

இதேவேளை காரினுள் இருந்த கடற்படைத்தளபதி கிளான்ஸி பெர்ணாண்டோவும் இவரது மெய்ப்பாதுகாவலர் எஸ். எம். டி. கே. வீரவாகு, கடற்படை அதிகாரியான லெப். சம்பக குணசேகரா, கடற்படை கார்சாரதி ஏ. ஸி. எம். பெரேரா ஆகியோர் ஸ்தலத்திலேயே கொலைப்பட்டனர்.

### தற்கொலைப்படை வீரரின் உடல் சிதறியது

இதேவேளை தனது உடலில் வெடிகுண்டை கட்டி தற்கொலைப்படை வீரராகச் செயற்பட்ட அந்த இளைஞரும் சின்னாபின்னமாகி சிதறிப்போனார். இவரது மோட்டார் சைக்கிளும், வெடித்துச் சிதறிய காரடியிலிருந்து பல யார் தூரத்திற்கு அப்பால் துண்டு துண்டுகளாக சிதறிக் கிடந்தது இந்த குண்டு வெடிப்பினால தளபதியின் காருக்குப் பின்னால் வந்த ஜீப் வண்டி ஒன்று பலத்த சேதமடைந்தது. மேலும் அந்த வீதியால் சென்ற இருவர் கொலைப்பட்டுமுள்ளனர் பலத்த அதிர்வினால் அருகிலிருந்த பல கட்டிடங்களின் யன்னல் கண்ணாடிகள், சீற்கள் மற்றும் பல பகுதிகள் நொருங்கி வீழ்ந்தன. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் பல பஸ் வண்டிகளினதும், லொறிகளினதும் கண்ணாடிகள் நொருங்கின; அருகிலிருந்த மின் கம்பங்கள் சரிந்து வீதிக்குக் குறுக்கே வீழ்ந்துள்ளன,

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)
கொழும்பு நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து நேற்று கொழும்பு நகரின் பல இடங்களில் தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்ட

(2ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - அரசு பேச்சுக்கு முயற்சி!

(கொழும்பு)
அரசு-விடுதலைப்புலிகளுடன் மிக விரைவில் சமாதான உடன்பாடொன்றை எட்ட மிகுந்த அக்கறை காட்டி வருவதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.
புலிகளுடன் வெற்றிகரமான சமாதான உடன்பாடு

(2ம் பக்கம் பார்க்க)

## மாவீரர்கள் தமிழீழ தாயகத்தின் தங்கத் தூண்கள்

(யாழ்ப்பாணம்)
"காய்ந்துபோன ஒரு நெல் மணிதான் ஆயிரம் நெல்மணிகளை உருவாக்குகிறது" என்கிறது ஒரு பலஸ்தீனக் கவிதை. இதன் பொருளை எம் கண் முன்னே கொண்டு வந்தவர்கள் எம் மாவீரர்கள்.
ஒன்று பத்தாகி, பத்து நூறாகி, நூறுஆயிரமாய், ஆயிரம் பல்லாயிரமாய் பல்கிப்

2-ம் பக்கம் பார்க்க

## பிரேமாவின் முடிவைப் பொறுத்தே 'குவேக்கர்ஸ்' புலிகளுடன் பேசும்

(கொழும்பு)
குவேக்கர்ஸ் சமாதானக் குழு விடுதலைப் புலிகளுடன் 2ம் கட்டப் பேச்சுகள் நடத்துவதா இல்லையா என்பது ஜனாதிபதி பிரேமதாசாவின் முடிவைப்பொறுத்தே அமையுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[2ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**நோவு வைத்தியம்**

ஒட்டசுபுலம் சமகித்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6888)

**சித்திரம் கைநூல்**

சித்திரப்பாடம் பயிலும் சகலருக்கும் ஏற்ற கைநூல் சித்திரம் (ஆண்டு 11) இன்றே வாங்குங்கள் ஆக்கம்: யசோ (ஆசிரியர்- சித்திரம் வினா விடை) (சி-6961)

## 33 வது நினைவு தினம்



அமரர்

சி. சி. கந்தையா

(மலாயன் பென்சனியர்)

தோற்றம்: 28-08.1894

மறைவு: 16 11-1959

குடும்பத்தினர்.

தேவாலய வீதி,
சங்கானை.

(சி-6979)


**'வை' ரக விமானங்களை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளது.

ரஷ்ய என்ஜின்களை இவற்றுக்கு பொருத்தி இரு விமானங்களையும்சீனாவுக்கு அனுப்பி அங்கு சில புதிய வசதிகளை மேற்கொண்டபின் புதியஇயந்திரங்களுடன் மீண்டும் இலங்கைக்கு திருப்பப் பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஆதேவேளை ஜே. ஒ. சியின் இந்த திட்டத்தை விமானப் படைத் தளபதி ஏயர் வைஸ் மாஷல் ரெறன்ஸ் குணவர்த்தனு கடுமையாக எதிர்த்துள்ளதுடன் புதிதாக பல யுத்த ஹெலிகொப்டர்களை வாங்குமாறு வற்புறுத்தியுள்ளார். (சி)

**கொழும்பு நகரில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

தமிழ் இளைஞர்கள் தங்கியிருந்த வீடுகள், தனியார் விடுதிகள் போன்றவைகளில் மிகத் தீவிரமாக பொலிஸாரால சோதனை நடத்தப்பட்டது.

இச்சோதனை நடவடிக்கைகளின்போது பலர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இதேவேளை நேற்று முழுநாளும் கொழும்பில் பெரும் பதற்றம் நிலவியது. (ரி - சி)

**தெரிவுக் குழுவின்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுக்குழு திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது.

இம்மாதம் 26-ம் திகதிக்குப் பின் தினமும் குழு அமர்வை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய யோசனைகளை முன்வைக்க இம்மாதம் 20ம் திகதி வரை அரசியல் கட்சிகளுக்கு அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. (ரி)

# மாவீரர் எழுச்சிநாள்

## கருத்தரங்கும்சிரமதானமும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ''எழுச்சி வாரம்'' அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இவ் எழுச்சி வாரத்தில் இன்று கோட்ட மட்டத்தில் வட்டவை பிரதேசத்தில் கருத்தரங்கு நடைபெறும் இடங்கள்;

வலிகாமம் - கோப்பாய் ஆவரங்கால் மத்திய ச. ச. நி தெல்லிப்பளை - அளவெட்டி ச. ச. நி, யாழ். கற்குளம் கொட்டடி ஸ்ரார் ச. ச நி, நல்லூர் - கந்தர்மடம் ஆத்திசூடி கலைமகள் ச. ச. நி

வடமராட்சி - கரவெட்டி - அண்ணசிலையடி மணியரசன் பாடசாலை.

தென்மராட்சி - கைதடி-வடக்கு ச. ச. நி கொடிகாமம் மந்துவில் குட்மன் ச. ச நி பளை-முகமாலை பாடசாலை. சாவகச்சேரி - தேன்மொழி பாலர் பாடசாலை.

தீவகம் - செற்பலி பண்டிதர் குடியிருப்பு - அரியாலை மணியரசன் குடியிருப்பு.

கடற்புலிகள் - வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை; வலிகாமம்.வடக்கு-மூளாய்பிள்ளையார் கோவிலடி. வடமராட்சி வடக்கு நெடியகாடு மடத்தடி, பொலிகண்டி மேற்கு மடத்தடி வலிகாமம் கிழக்கு திருநகர் ச. ச. நிலையம் சென்ரேக் ச. ச. நி, குருநகர் ச. ச நி.

மாணவர் அமைப்பு பண்டத்தரிப்பு கோட்டம் சங்கானை சிவப்பிரகாசா வித்தி.

**சிரமதானம்**

தீவகம் - அரியாலை மணியரசன குடியிருப்பு, டயஸ் முகாம்.

வடமராட்சி - கட்டைவேலி மாணிக்கவாசகர் பாடசாலை.

வலிகாமம் சங்கானை அராலி வடக்கு ச. ச. நி கோப்பாய்-மூஸ்தபா. பிரியதர்சினி வீதி சண்டிலிப்பாய் - இடம்பெயர்ந்த முகாம்களில்

வலிகாமம் - சுன்னாகம் திலீபன் முகாம், கந்தரோடை வீதி.

நல்லூர் - கோண்டாவில் கிழக்கு மயானம்.

கடற்புலிகள் - வலிகாமம் கிழக்கு-துண்டி வீதி, மகேந்திரபுரம், எழிலூர் வீதிகள். புனித அந்தோனியார் ச. ச. நி. பங்கர், நினைவுத்தூபி சுற்றுடல், கடலோரம், ஈச்சமோட்டை ச. ச. நி

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி இந்து வித்தியாலயம், செம்பியன் பற்று றே.க. பாடசாலை. ஆழியவளை சி. சி. அ. க. பாடசாலை, வெற்றிலைக்கேணி றே.க. பாடசாலை.

**மாவீரர்கள்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருகி நிற்கும் விடுதலைப் படையெனும் தோப்பின் வித்துக்கள் மாவீரர்கள்.

எமது சந்ததியின ஒளிமயமான, பாதுகாப்பான எதிர்காலத்துக்கு உத்தரவாதமளித்து விளங்குகின்றார்கள் மாவீரர்கள். தாயக சுதந்திரத்திற்காய்த் தற்கொடைக்குப் பின்னிற்காத மாபெரும் படையணியை தம்மினத்திற்கு ஒப்புக் கொடுத்தவர்கள் உன்னதத்தின் தத்துப் பிள்ளைகள், தமிழீழ தாயகத்தின் தங்கத் தூண்கள்.

இவர்களின் இலட்சியக் கனவு எம்மிலிருந்து பிரிக்க முடியாத கவசகுண்டலம். இவர் தம் நினைவுகள் சுதந்திர யாத்திரையின் வேகத்தை இன்னும் வீறுபடுத்தி நிற்கிறது. எம்மால் நம்பமுடிகிறது, நாளை மலரப்போகும் சுதந்திர தமிழீழத்தை.


## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**திருமதி தங்கவேலு செல்லக்கண்டு**

மலர்வு: 11 - 03 - 1917

உதிர்வு: 19 - 10 - 1992

19-10-92இல் சிவபதமடைந்த திருமதி செல்லக்கண்டு (காலஞ்சென்ற அருணசலத்தின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தங்கவேலுவின் மனைவியும்) அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டும், பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

18-11-92இல் அன்னார் வசித்த ஆலடி இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டி, சபிண்டிகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெருமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்-

ஆலடி,
வல்வெட்டித்துறை.

(சி 6950)


# செஞ்சிலுவை குழு காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேற்று மாலை 3-00 மணியளவில் காரைநகர் சென்று அங்கிருந்து காங்கேசன்துறை நோக்கி புறப்பட்டனர். இவர்கள் இராணுவத்திடம் சிக்கியுள்ள பொதுமக்களுக்கான தபால்களையும் எடுத்துச் சென்றனர். (159)

# இராணுவத்தில் பத்தாயிரம் வெற்றிடங்களை நிரப்ப ஆட்பற்றாக்குறை

(கொழும்பு)

ராணுவத்திலுள்ள பத்தாயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

பத்தாயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இராணுவத்தில் சேர எவரும் முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடன் போர்புரிய வேண்டும் என்ற அச்சம் காரணமாக இந்த இராணுவ வெற்றிடங்களை நிரப்ப எவரும் முன்வரவில்லை என்று கருதப்படுகிறது. (ரி)

# தமிழ்க் கட்சிகளிடையே பெரும் பிளவு?

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ் கட்சிகளிடையே பெரும் பிளவு நிலை உருவாகி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தெரிவுக்குழு தலைவர் மங்கள முனசிங்க முன்வைத்த வடக்கு-கிழக்கு இணைக்கப்படாத திட்டத்தை தமிழ் கட்சிகள் ஒட்டுமொத்தமாக நிராகரித்தபின் சில கட்சிகள் வடக்கு-கிழக்கு இணைப்பை நிராகரித்தும், சமஷ்டி முறையிலான திட்டத்தையும் முன்வைத்துள்ளன.

இதனால் நிரந்தர இணைப்பை வலியுறுத்தும் சில கட்சிகள் ஒன்றாகவும், இணைப்பை நிராகரிக்கும் கட்சிகள் ஒன்றாகவும், சமஷ்டிமுறை தீர்வை வலியுறுத்தும் கட்சிகள் ஒன்றாகவும் நிற்கின்றனவாம். (சி)

**புலிகள் அரசு**

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஒன்றைக் காண்பதன் மூலம் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதித்தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக தனது முழுச்சக்தியையும் பயன்படுத்த அரசு தீவிரமாக முயற்சித்து வருகிறது.

இதன ஒரு கட்டமாக அரசு வடக்கு-கிழக்கில் குறிப்பிடத்தக்க அளவில் இராணுவ நடவடிக்கைகளைக் குறைத்துள்ளது. அரசியல் நடவடிக்கைக்காக இராணுவ நடவடிக்கைகள் பின்தள்ளப்படலாமெனவும் அச்செய்தியல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

**விமானப் படைத்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுப் படைத் தலைமைத் தளபதி ஹமில்டன் வனசிங்கவுக்கும், ரெறன்ஸ் குணவர்த்தனுவுக்கும் இடையில் அண்மைக் காலமாக இடம்பெற்று வந்த சர்ச்சையின் விளைவாகவே அவரது அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு கிழக்கில் இனிமேல் நடைபெறும் விமானத் தாக்குதல் பற்றியும், அதற்கான இடங்கள் குறித்தும் விமானப்படை உப தளபதி ஒலிவர் ரணசிங்காவே தீர்மானிப்பார்.

இவருக்கு கூட்டுப் படைத் தலைமையகமும், பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ரணதுங்கவும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலர் எயர் வைஸ் மார்ஷல் வோல்டர் பெர்ணன்டோவும் உதவுவர்.

ஹமில்டன் வனசிங்கவின் இந்த அறிவிப்பை அடுத்து விமானப் படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனு அவரை நேரில் சந்தித்து கடுமையாக எதிர்த்துள்ளதுடன், ஹமில்டனுடனும், ஜெனரல் சிறில் ரணதுங்கவுடனும் கடுமையாக வாக்குவாதப்பட்டுமுள்ளார்.

அண்மைக் காலமாக யுத்த விமானக் கொள்வனவு குறித்தும், வை-8, வை-12 பாவிப்புக் குறித்தும் படைத் தளபதிகளிடையே பெரும் சர்ச்சைகள் இடம்பெற்று வருவதும் தெரிந்ததே. (சி)

# வயிற்றோட்டம் குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவிலைச் சேர்ந்த எஸ். உதயகாந்தன் என்ற 9 மாதக் குழந்தை நேற்றைய தினம் யாழ். அரசினர் மருத்துவ மனையில் வயிற்றோட்டத்திற்குப்பலியானது. (159)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 10-00 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல விளையாட்டுக் கழகங்களிலும் இருந்து இரு பிரதிநிதிகள் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக் கொள்கின்றது. விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

1992-ல் நடை பெற்ற ஆண்டு 5 புலமை பரிசில் பரீட்சை முடிவுகள கொழும்பில் நேற்று வெளியாகின.

யாழ் மாவட்டத்திற்கான பரீட்சை முடிவுகள் விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இம்முறை பரீட்சைக்கு ஆகக்கூடுதலாக 3 லட்சத்து 40.000 மாணவர்கள் தோற்றியிருந்தனர். (சி)

**பிரேமாவின்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளை யாழ்ப்பாணத்தில் சந்தித்த குவேக்கர் குழு, அமைச்சர்கள் ஹமீத், தொண்டமானையும் சந்தித்து புலிகளின் நிலைப்பாடு பற்றித் தெரிவித்தனர்.

புலிகளின் நிலைப்பாட்டை இவர்கள் ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் தெரிவிப்பர். இதன்பின் ஜனாதிபதியின் முடிவை பொறுத்தே அடுத்த கட்ட பேச்சுக்கள் அமையுமென தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ★ தமிழக, கேரள மாநிலங்களில்

# புயல், மழை, நிலச்சரிவினால் இருநூறுபேர் பலியானார்கள்

## 600 பேரை காணவில்லை

(சென்னை)

தமிழகம் கேரளமாநிலங்களில் கடந்த சில தினங்களாக கொட்டிவரும் அடைமழையாலும் புயலினாலும் நிலச்சரிவினாலும் இதுவரை 200 பேர் உயிரிழந்துள்ளனர் 600 பேர் வரை காணாமல் போயுள்ளனர் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். பல ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து தகர்ந்துள்ளன.

கேரளவில் 31 பலியானதுடன் மேலும் 30 பேர் காணாமல் போயுள்ளனர் மூவாயிரத்திற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

திருநெல்வேலி கட்டப்பொம்மன் மாவட்டத்தில் மட்டும் 54 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர். ஏராளமான கால் நடைகள் வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

விக்கிரமசிங்கபுரம் என்னுமிடத்தில் எட்டு வீடுகள் இடிந்து வீழ்ந்ததில் 37 பேர் உயிரிழந்தனர். மதுரை மாவட்டத்தில் மழை வெள்ளத்திற்கு 37 பேர் பலியாகியுள்ளனர். மற்றொரு இடத்தில் வீடு இடிந்ததில் 3 பேர் பலியானார்கள் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன.

சின்னமன்னூரில் மண்சரிவில் 16 பேர் சிக்கினர் இவர்களில் 10 பேர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் மீட்கப்பட்டனர் ஏனைய ஆறு பேரும் உயிருடன் புதையுண்டு போயினர்.

வைகைநதி உடைப்பெடுக்கும் அபாயத்தால் கரையோரங்களில் இருக்கும் மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகிறார்கள் புயல் கடந்து சென்ற சிதம்பரனார் மாவட்டத்தில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது இங்கு ஏழுபேர் உயிரிழந்துள்ளனர்.

பல சிற்றூர்களில் வெள்ளம் புகுந்ததால் பெருமளவு குடிலசை வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன பல இடங்களில் வெள்ளம் பத்து அடி உயரத்திற்கு உயர்ந்துள்ளதால் பெருமளவு வீடுகள் நீரினுள் மூழ்கி விட்டன

பல இடங்களில் மக்கள் மாடி வீடுகளிலும் பாரியமரக் கிளைகளிலும் தஞ்சமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது தமிழகத்தில் பல இடங்களில் நூற்றுக்கணக்கான பாரிய மரங்கள் வேருடன் சரிந்து சாய்ந்ததில் போக்குவரத்துக்கள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது

ரயில் போக்குவரத்தும். தொலைத்தொடர்பும் பெருமளவு பகுதிகளில் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன. மின்சார தொடர்புகள் அடியோடு துண்டிக்கப்பட்டதால் இரவு நேரங்களில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாம்

உதவி மீட்பு பணிக்கென 6 ஹெலிகொப்டர்கள் விரைந்துள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 3 லட்சம் பரப்பில் நெற்பயிர்கள் தண்ணீரில் முற்றாக மூழ்கிவிட்டன. தஞ்சையில் 3பேர் பலியாகியுள்ளனர்.

திண்டுக்கலில் ஒரு வீடு இடிந்து வீழ்ந்ததில் ஒன்பது பேர் பலியானார்கள்.

மீட்புப் பணிகள் துரிதகதியில் நடைபெற்றுவருகிறது. பாதிக்கப்பட்ட பல இடங்களையும் முதல்வர் ஜெயலலிதா நேற்று ஹெலிகொப்டர் மூலம் பார்வையிட்டார். (சி-இ)

---

### பாதிக்கப்பட்ட

## இடங்களுக்கு முதல்வர் ஜெயலலிதா விஜயம்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழகத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிடுவார். இன்று 17-ம் திகதி நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலும், 18-ம் திகதி கன்னியாகுமரி மாவட்டத்திலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை அவர் பார்வையிடுவார். (இ)

---

## தனியார்துறைக்கு வேதன உயர்வு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

தனியார் துறைக்கு 30 சதவீத வேதன உயர்வு வழங்குவது குறித்து தொழில் ஆணையாளர் பேச்சுக்கள் நடாத்தி வருகிறார்.

அரசாங்கம் வரவு-செலவுத் திட்டத்தில் அளித்த 30 சத சம்பள உயர்வு தனியார்துறையினருக்கும் அளிக்கமுடியுமா என்பது பற்றி சம்பளநிர்ணய சபைகளுடன் தொழில் ஆணையாளர் திரு. ஜி. வீரக்கோன் பேச்சுக்களை நடாத்தி வருகிறார்.

திரு. வீரக்கோன் ஏற்கனவே தொழில் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 86 சம்பளச் சபைகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடாத்தியதும் குறிப்பிடத்தக்கது. (சி)

---

### யாழ்ப்பாண

## இராமசேவையாளர்களுக்கு 400 சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டின் சகல கிராம சேவையாளர்களுக்கும் ஒவ்வொரு துவிச்சக்கர வண்டி வழங்கப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து அண்மையில் கொழும்பு சென்ற யாழ்ப்பாண கிராம சேவையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் தங்கள் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்துத் தெரிவித்ததையடுத்தே இவ்வாறு ஒருமுடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சுமார் 400 துவிச்சக்கர வண்டிகளை கொழும்பு கூட்டுப் படைத்தலைமைச் செயலகத்தின் அனுமதியைப் பெற்று கப்பல் மூலம் அனுப்பி வைப்பதற்கு கிராமசேவையாளர் சங்க தலைமைச் செயலகம் ஒத்துக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

முற்பணம் அனுப்பி வைக்கப்படுமிடத்து 400 துவிச்சக்கரவண்டிகளும் கப்பல் மூலம் யாழ்.நகரி வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. [161, 137]

---

★ தமிழீழ மாவீரர் நாள் — 1992

## மாவீரர்களே!

உங்களின் நினைவுடன் தலைவன்
தலைவனின் வழியினில் புலிகள்
புலிகளின் பக்கமே மக்கள்
மக்களே விடுதலைப் புலிகள்.

— தமிழீழ மாவீரர் பணிமனை

---

## அளவெட்டியில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி வடக்குப்பகுதியில் வீடு பார்க்கச் சென்ற பொதுமக்கள்மீது படையினர் நேற்று சரமாரியாகத் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த சந்திரசேகரம் (34 வயது என்பவர் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [159]

---

## இராசி பலன்

**17-11-1992**

**(தமிழுக்கு கார்த்திகை 02)**

செவ்வாய்க்கிழமை

ஸப்தமி காலை 6-19 வரை: ஆயிலியம் பி. ப. 2-56 வரை அட்டமி பி. ப. 4-04 வரை: இராகுகாலம் மாலை 3-08 முதல் 4-38 வரை சுபநேரம் காலை 10-38முதல் 12-08 வரை

மேடம்; தொழில் மந்தம், கடுமையான ரோகம், யோசனை.

இடபம்: சுபச்செலவு, விருந்துண்ணல், நண்பர் உதவி.

மிதுனம்: உறவினர் பகை, வீணான கலகம், அலைச்சல்.

கடகம்: கருத்துவேற்றுமை, புத்திரர் உதவி, பணவரவு.

சிங்கம்: பிரயாண செலவு. கலைத்துறை ஆர்வம், மனச் சுமை.

கன்னி: கடுமையான வார்த்தை, நம்பி ஏமாறல், தெய்வ தரிசனம்.

துலாம்: புத்திரிகளால் மகிழ்ச்சி, குருபக்தி, வரவேற்பு

விருச்சிகம்: நண்பர் விரோதம், பிணிநோய், பயணதாமதம்.

தனுசு: பணச்சிக்கல், குடும்பமோதல், சுயநலம்.

மகரம்: மற்றவர் தயவு, முயற்சி பலிதம், பேச்சு வன்மை.

கும்பம், உணர்ச்சி வயப்படல், சுபகாரியம், குடும்ப மகிழ்ச்சி.

மீனம்; சாஸ்திரஞானம். தொழில் செல்வாக்கு, தன வரவு.

— ஜோஸ்யர்

---

## ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக லலித்

(கொழும்பு)

அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்கட்சிகளின் பொது வேட்பாளராக திரு லலித் அத்துலத்முதலியை நிறுத்த முயற்சிகள் நடைபெற்று வருவதாக செய்தி தெரிவிக்கின்றன.

திரு. லலித்தை பொதுவேட்பாளராக நிறுத்தும் முயற்சியில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க பகிரங்கமாக ஈடுபட்டுவருகிறார்.

இதனால் சுதந்திரக்கட்சிக்குள் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

## தமிழீழ மீட்பு நிதி கடன்மீளளிப்பு பெறுவோர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதிக் கடன் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தோரின் கடன் மீளளிப்பு திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம் வேலணை, காரைநகர் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரரின் விபரம் வருமாறு;

**யாழ்ப்பாணம் 1992**

மாசி
106, 994, 1308, 1346, 1590. 2389, 4062, 4603. 4612.

பங்குனி
75. 92, 97, 143, 941, 1349, 2165, 2604, 4986.

சித்திரை
487, 563, 643, 702, 1133, 1690, 2812, 4072, 4221.

வைகாசி
87, 123, 392, 818, 837, 931, 1487, 3123, 4163,

ஆனி
554, 593, 618, 951, 1984, 2321, 3142, 4126, 4695.

ஆடி
21, 45 193 631, 1279, 2178, 3317, 3598, 3724.

ஆவணி
306, 416, 534, 832, 957 1329, 3222, 4841, 4988.

புரட்டாதி
23, 93, 108 159, 397 657, 1435, 2548, 2760, 3202.

ஐப்பசி
55, 58 256 731, 965, 1445, 2188, 2975, 3816, 4485.

கார்த்திகை
73, 84, 495, 524, 600 738, 834, 853, 859, 3529.

**வேலணை 1992**

மாசி
318, 415, 419, 726, 2292 2711.

பங்குனி
173, 202, 316, 331, 1543, 2618.

சித்திரை
175, 347, 691, 698, 713, 2343

வைகாசி
299 372, 717, 783, 970, 991.

ஆனி
28, 252, 311, 1023, 1718, 2630.

ஆடி
124, 593, 745, 949, 1467, 1712.

ஆவணி
75, 118, 438, 891, 2270 2798.

பரட்டாசி
143, 538, 721, 786, 872.

ஐப்பசி
142, 617, 742, 762, 917.

கார்த்திகை
355, 512, 681, 1011, 1902

**காரைநகர் 1992**

மாசி 316, 733
பங்குனி 423. 805
சித்திரை 523, 746.
வைகாசி 106, 147.
ஆனி 834, 903.
ஆடி 97. 983.
ஆவணி 52, 756.
புரட்டாசி 34, 540.
ஐப்பசி 753, 759
கார்த்திகை 59, 83.

---

## மாவீரர் வார ஏற்பாடுகள்

### சந்திகளில் பந்தல்கள்

(பண்டத்தரிப்பு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பகுதியில் முக்கிய சந்திகளில் அலங்கார வளைவுகள் நிறுவப்பட்டு வருகின்றது. மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைத்து அஞ்சலி செலுத்துவதற்கான நீண்ட பந்தல்களும் நிறுவப்பட்டுள்ளது. சிரமதானப்பணிகளும் மரம்நாட்டு நிகழ்ச்சிகளும் இப்பகுதியில் அங்காங்கே நடைபெற்றுவருகின்றன. (72)

### சிரமதான பணிகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துறைமுகம் சந்தியில் கொழும்புத்துறை சனசமூக நிலையமும், இப்பகுதி ஏனைய பொது அமைப்புகளும் கூட்டாக இணைந்து பிரமாண்டமான வளைவுகள், பந்தல்கள் சிரமதானப்பணிமூலம் செய்யப்படுகிறது.

இப்பகுதிப்பிரதான வீதிகள் உட்பட ஏனைய பகுதிகளும் சிரமதானப்பணி மூலம் செப்பனிடப்படுகிறது. (154)

### அலங்கார வளைவு

(பண்டத்தரிப்பு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஒட்டுமடம் சந்தியில் பிரமாண்டமான அலங்கார வளைவு அமைக்கப்பட்டுள்ளது. [72]

### வீதிகள் துப்பரவு

(சித்தன்கேணி)

மாவீரர் வாரத்தையொட்டி கல்நகர் நேருஜி கிராம முன்னேற்றச் சங்கத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீதிகளைத் துப்பரவு செய்தனர். (137)

### வடமராட்சி கிழக்கில்

(தாளையடி)

மாவீரர் எழுச்சி வாரமும் மாவீரர்வாரமும் வடமராட்சி கிழக்கில் இம்முறை சிறப்பாக அனுஷ்டிக்க சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகிறது.

கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன் தலைமையில் அண்மையில் வடமராட்சி கிழக்கிலுள்ள பொது ஸ்தாபனங்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. (163)

---

## விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

''இலங்கை திட்டமிடல் சேவையின் 2ம் வகுப்பு, 2ம் தர உதவிப்பணிப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டி பரீட்சை - 1992க்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்ப

(4ம் பக்கம் பார்க்க)

## வங்காள விரிகுடாவில் மீண்டும் சூறாவளி அபாயம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவுக்குத் தெற்கே மற்றுமொரு சூறாவளிக் காற்று ஒன்று உருவாகி வருகின்றது என்று வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது.

இது இலங்கையின் கிழக்குக் கடற்கரையிலிருந்து 1600 கி. மீற்றர் தூரத்தில் நேற்றுக் காலை நிலை கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சூறாவளி தீவிரமடைந்து மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து செல்லக் கூடும். இலங்கையின் கால நிலையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று வானிலை அவதான நிலையம் மேலும் கூறியுள்ளது. (சு)

## 150 ஊர்காவல் படையினர் கடமைக்கு செல்ல மறுப்பு

(கொழும்பு)

மாத்தறையில் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட 216 ஊர்காவல் படையினரில் 150 பேர் திருமலை மாவட்ட எல்லைக் கிராமங்களில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட மறுப்பு தெரிவித்து கடமைக்கு செல்ல மறுத்து விட்டனர்.

அடுத்த ஒருமாதத்தினுள் இவர்கள் கடமைக்கு திரும்பாவிடின் இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

தற்போது நாடு முழுவதும் 30 000 ஊர்காவல் படையினர் உள்ளனர். இவர்களில் சொந்த மாவட்டங்களில் கடமை புரிவோருக்கு நாளொன்றுக்கு 55 ரூபாவும், பிற மாவட்டங்களில் கடமை புரிவோருக்கு 85 ரூபாவும் வழங்கப்பட்டு வருகிறது. (சி)

### இணைப்பு நிராகரிக்கப்பட்டால்

## புளொட் இயக்கமும் ஆயுதம் தூக்குமாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பை அரசு ஏற்காவிடில் புளொட் இயக்கம் அரசுக்கு எதிராக மீண்டும் ஆயுதம் தூக்குமென அதன் தலைவர் சித்தார்த்தன் அரசு அதிகாரி ஒருவரிடம் கூறியுள்ளார்.

மேலும் வவுனியா இராணுவமுகாமில் தமிழ் இளைஞருக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதற்கும் இவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவத்தினருக்கு புளொட் இயக்கத்தினர் 'கிளைமோர் குண்டு'களையும் ஜொனிமிதி வெடிகளையும் வவுனியா இராணுவ முகாமில் வைத்து தயாரித்து வழங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### மேஜர் முரளி நினைவு:

## உதைபந்தாட்டப் போட்டி; இன்று இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித் திணைக்களம், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் இறுதி ஆட்டமும், மூன்றும் இடத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டியும் இன்று மாலை 2-30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

3ம் இடத்திற்கான ஆட்டத்தில் ஸ்கந்தாக் கல்லூரி எதிர் ஹாட்லிக்கல்லூரி அணி மோதும். இறுதி ஆட்டத்தில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிமோதும்.

முதலாம் இடத்தைப் பெறும் அணிக்கு மேஜர் முரளி நினைவுச் சுற்றுக் கிண்ணம் வழங்கப்படும்.

### விண்ணப்பம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுத் திகதி 20-11-1992. மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் பொருளியற்றுறை அலுவலகம் யாழ். பல்கலைக் கழகத்தில் பெறலாம்.

## மரண அறிவித்தல்

### சீதாராமன் சிங்காரவேலு

29/10 சேச்லேன் ஒட்டுமடத்தைச் சேர்ந்த திரு. சீதாராமன் சிங்காரவேலு அவர்கள் 16 - 11 - 92 அன்று அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற காமாட்சியின் அன்புக்கணவரும் ஜெயமணி, நாகேஸ்வரி, நவநீதரட்னம், பாலசுப்பிரமணியம், யோகநாதன், ஆனந்தராசா, கலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கவேலு, பாலகிருஷ்ணன், பரமசிவம், வனிதா ராஜராஜேஸ்வரி, ஜெயந்தி, காளிதாஸ் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 17 - 11 - 92 பகல் 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.
(சி-6981)

இப்பத்திரிகை ""ஈழநாடு"" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8

### மோட்டார் சைக்கிளில் (1ம் பக்கத் தொடர்ச்சி)

## கொழும்பு அதிர்ந்தது

குண்டு வெடிப்பினால் கொழும்பின் நகரப் பகுதி அதிர்ந்தது. குண்டுச் சத்தம் பல மைல் தூரத்திற்கும் கேட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு உடனடியாக விரைந்த படையினர் வீதிப் போக்குவரத்தை மூடி, தளபதியின் காரில் இருந்தவர்களை அகற்ற முற்பட்டனர். பலத்த சிரமத்தின் மத்தியில் தளபதியினதும் ஏனையோரினதும் கருகிப்போன சடலங்களை தலைகீழாகச் சப்பளிந்த நிலையிலிருந்த காரினுள்ளிருந்து மீட்கப்பட்டன காருக்கு வெளியே தளபதியின் தோள்பட்டையில் அணியும் பதக்கங்கள் வீழ்ந்து கிடந்தன. காரும் பின் 'கிறேன்' மூலம் அகற்றப்பட்டது.

## உயர் அதிகாரிகள் ஸ்தல விஜயம்

உடனடியாகச் சடலங்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. சம்பவம் நடைபெற்ற இடத்திற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ரணதுங்க, கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வனசிங்க, இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன மற்றும் படை உயரதிகாரிகள் பலர் விஜயம் செய்தனர். அவ்விடத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்களும் கூடினர்.

## ஜனாதிபதி, அமைச்சர்கள் அஞ்சலி

நேற்று மாலை தளபதியின் பூதவுடல் திறந்த பேழையில் வைக்கப்பட்டிருந்தபோது ஜனாதிபதி பிரேமதாசா, திருமதி ஹேமா பிரேமதாசா, பிரதமர் டி. பி. விஜயதுங்க, அமைச்சர்கள் ரணில் விக்கிரமசிங்க, ஏ. ஜே. ரணசிங்க, தொண்டமான், ஏ. சி. எஸ். ஹமீத் உட்படப் பல அமைச்சர் நேரில் விஜயம்செய்து அஞ்சலி செலுத்தினர். இந்தியா, பாகிஸ்தான் தூதர்கள் உட்படப் பல நாட்டு இராஜதந்திரிகளும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

## அட்மிரலாக பதவி உயர்வு

கொலையுண்ட கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னாண்டோ 'அட்மிரல்' தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ மொறட்டுவ பிறின்சஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். 1957ம் ஆண்டில் இலங்கைக் கடற்படையில் கடேற் அதிகாரியாகச் சேர்ந்த இவர் பாகிஸ்தானிலும் பின்னர் பிரிட்டனில் பிரிட்டிஷ் றோயல் கடற்படைக் கல்லூரியிலும் பயிற்சி பெற்றார். இவர் பாகிஸ்தான் கடற்படைக் கல்லூரியிலும் புதுடில்லியிலுள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியிலும் பயிற்சிகளைப் பெற்றார். இவர் பட்டப் படிப்பு, பின்படிப்பு முதுமாணிப் பட்டம் பெற்ற ஒரே ஒரு அதிகாரியாவார். விரிவுரையாளராகவும் இருந்தார்.

இலங்கைக் கடற்படையில் தற்பொழுது வானொலி செய்திப் பரிவர்த்தனையை அறிமுகம் செய்தவரும் இவராவர்.. இவர் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 1ம் திகதி கடற்படை தளபதியாக பதவியேற்றார்.

## 35 வருட கடற்படை சேவை

கிளான்ஸி பெர்னாண்டோ கடற்படையில் 35 வருடங்கள் பணியாற்றியுள்ளார், இவர் இலங்கை கடற்படையின் 11வது தளபதியாவார் இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். கடந்த வருடம் கடற்படைத் தளபதியாக பதவியேற்ற இவர் அடுத்த வருடம் ஓய்வுபெறவிருந்தார், கடந்த 3 மாதங்களுக்கு முன் இந்தியா சென்ற இவர் இந்திய படை அதிகாரிகள் பலரை சந்தித்து புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் பற்றி பல தகவல்களை பெற்றதுடன் இந்திய படைகளிடம் பல உதவிகளையும் கோரியிருந்தார். தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் இதன்போது சந்தித்திருந்தார்.

## அரசியல் வட்டாரம் அதிர்ச்சி

ஜனாதிபதி மாளிகை, பொலிஸ் தலைமையகம், இராணுவ முகாம் உட்பட பல முக்கிய பகுதிகள் நிறைந்த பெரும் பாதுகாப்பானபிரதேசத்தில் நடந்த இந்த தாக்குதல் சம்பவம் பாதுகாப்பு வட்டாரங்களிலும், அரசியல் வட்டாரங்களிலும் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாம்.

## விடுதலைப்புலிகளே பொறுப்பு

இவ்வாறான ஒரு தற்கொலைப்படைத் தாக்குதலை மிகத் துல்லியமாக திட்டமிட்டு அதற்கே உரிய முறையில் நடாத்தி முடிப்பதில் விடுதலைப் புலிகளைப்போல உலகில் வேறெந்த அமைப்பும் இல்லை என 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' தெரிவித்தது இச்சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பெனவும் புலிகளின் வழமையான தாக்குதலில் இதுவும் ஒன்றென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

## முப்படைகள் பெரும் திண்டாட்டம்

இத்தாக்குதலை பெரிது படுத்திக் காட்ட விரும்பாத அரசு நேற்றைய சம்பவத்தை பெருமளவில் மூடி மறைத்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்தன. இது ஒரு தனிப்பட்ட தீவிரவாத சம்பவம் என்றும் நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. ஆள் பற்றாக் குறையால் திணறித் திண்டாடும் முப்படைகளும் இந்த உயர் தளபதிகளின் இழப்பால் பெரும் திண்டாட்டம் காணும் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

## அரசின் முயற்சிக்கு பெரும் அடி

நாளை புதன்கிழமை கொழும்பில் எக்ஸ்போ 92 என்ற ஏற்றுமதி கண்காட்சி ஆரம்பமாகவுள்ள இவ்வேளையில் பல நாடுகளையும் சேர்ந்த சுமார் 2000 வெளிநாட்டவர்கள் கொழும்பு வந்துள்ளனர். இச்சம்பவம் இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டை மேற்கொள்ள அரசு மேற்கொண்ட சகல முயற்சிகளுக்கும் பெரும் அடியாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## கிரிக்கெட் போட்டி இடை நிறுத்தம்

இதற்கிடையில் 1986-ம் ஆண்டு கொழும்பில் கிரிக்கெட் போட்டி ஒன்றில் நியூஸிலாந்து அணி விளையாடிக் கொண்டிருந்தவேளை புறக்கோட்டையில் பாரிய குண்டு வெடித்ததால் ஆட்டத்தை இடைநடுவில் கைவிட்டு நியூஸிலாந்து அணி அன்று இரவே நாடு திரும்பியது. அந்த நியூஸிலாந்து அணி 6 வருடங்களின் பின் இலங்கையில் இருமாத கால சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு நேற்று முன்தினமிரவு தான் கொழும்பு வந்து சேர்ந்தது தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இவர்கள் தங்கியிருந்தனர். இந்த ஹோட்டலுக்கு முன்னாலேயே குண்டு வெடித்ததால் வீரர்கள் வெலவெலத்து போய்விட்டனராம். நேற்று இவர்கள் தங்கள் நாட்டு ராஜதந்திரிகளுடனும் இலங்கை அதிகாரிகளுடனும் பல மணி நேரம் பேச்சுக்களை நடத்தினர். இறுதியில் தமது இலங்கைப் போட்டிகளை ரத்துச் செய்வதாக அறிவித்தனர். அவர்கள் இன்று தாயகம் புறப்படுவர். (சி-சு-ரி)